**கவனிக்க.**-2024.09.27 ஆந் திகதிய 2404 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II : பகுதி III மற்றும் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2405 - 2024 ඔක්තෝබර් මස 04 වැනි සිකුරාදා - 2024.10.04

2405 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1949 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1950 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1948 | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1949 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

'ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


1947-B 82615-405 (2024/ 10)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## மூதூர் மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்

### பகிரங்க ஏல விற்பனை - 2024.10.12

01. மூதூர் மாவட்ட /நீதிவான் நீதிமன்றினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அரசுடமையாக்கப்பட்டதும் மற்றும் உரிமை கோரப்படாத பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை 2024.10.12 ஆந் திகதியன்று காலை 9.00 மணியளவில் நீதிமன்ற வளாகத்தில் நடாத்தப்படும்.

02. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களினை மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்பதாக பார்வையிடலாம்.

03. பகிரங்க ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களிற்கு உரிய விலை கிடைக்கப்பெறாதவிடத்து ஏலவிற்பனையிலிருந்து மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

04. விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

05. பொருட்களை கொள்வனவு செய்வோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய ஆளடையாள அட்டையை கொண்டுவர வேண்டும்.

தஸ்லீம் முகம்மட் பௌஸான்,
மாவட்ட நீதிபதி/நீதிவான்,
மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
மூதூர்.

**மூதூர் மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்**
**பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களின் விபரங்கள் 2024.10.12.**

| தொ.இல. | வழக்கு இல. | பொருட்களின் வகை | தொகை |
|---|---|---|---|
| 01 | AR/196/24 | மீன்பிடி வலைகள் | 01 |
| 02 | AR/396/24 | மீன்பிடி வலைகள் | 01 |
| 03 | BR/74/24 | வெளி இணைப்பு இயந்திரம் (Yamaha Engine/ 15HP) | 01 |
| 04 | ...................... | மிதப்புக்கட்டை | 1500 |
| 05 | MC/44934/20 | APF City- ABG- 4028 முச்சக்கர வண்டி | 01 |
| 06 | MC/39200/18 | சிவப்பு நிற ஹீரோ ஹொன்டா மோட்டர் சைக்கிள் பதிவு இல. EP MY 9904 | 01 |
| 07 | ............................ | பஜாஜ் டிஸ்கவர் மோட்டர் சைக்கிள் பதிவு இல. EP BAD 4033 | 01 |
| 08 | ......................... | ஆற்று மணல் | 15 Cube |
| 09 | ......................... | இருமண் | 09 Cube |

10- 28

## ஆய விற்பனையும் குத்தகையும்

### கொழும்பு பிரதேச செயலகப் பிரிவு

**2025 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகளைக் குத்தகைக்கு மீள் விற்பனை செய்தல்**

2024.08.09 ஆந் திகதி இது தொடர்பாக 2397 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக,

02. 2025 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கு 2024.09.13 ஆந் திகதி அன்று ஏலவிற்பனை இடம்பெற்றது. இதில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தவறணைகள் விற்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலக்கம் 02 பிரிவு கொட்டாஞ்சேனை கள்ளுத் தவறணை
இலக்கம் 04 பிரிவு மாதம்பிட்டிய (பேர்கியூசன் வீதி) கள்ளுத் தவறணை
இலக்கம் 05 பிரிவு மாதம்பிட்டிய கள்ளுத் தவறணை

03. இதற்கமைவாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகள் 2024.10.11 ஆந் திகதி மீண்டும் ஏலவிற்பனைக்கு விடுக்கப்பட்டுள்ளதோடு, அதற்கான கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024.10.11 ஆந் திகதி மு.ப. 10.30 மணி ஆகும். அதே திகதியில் மு.ப.10.45 மணிக்கு கள்ளுத் தவறணைகளின் ஏல விற்பனை இடம்பெறும் என்பதையும், 2024. 08.09 ஆந் திகதி 2397 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கமைய அனைத்து நிபந்தனைகளும் நடைமுறையில் உள்ளன என்பதை அறியத்தருகிறோம்.

இந்த அறிவித்தலுக்கமைய சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படுமாயின் சிங்கள மொழியில் உள்ள உரையே வலுப்பெறவேண்டும்.

பியநாத் பெரேரா,
கொழும்பு பிரதேச செயலகம்
(பதிற்கடமை).

2024, செத்தெம்பர் 24,
கொழும்பு பிரதேச செயலகம்.

10- 21/1

---

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**அசோக இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட்**
**முன்பு தர்ஷன் இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட்**
**(கம்பனி பதிவு இல. பீவீ 129493)**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் பெயர்மாற்றம் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படி தர்ஷன் இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட் (முன்னைய பெயர்) என்ற அதன் பெயரை அசோக இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட் (புதிய பெயர்) என 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி (கம்பனி பதிவு இலக்கம் பீவீ 129493) இன் கீழ் தன் பெயரை மாற்றம் செய்துள்ளது என்பதையும் இக்கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 794/2, 3 ஆவது ஒழுங்கை, மொல்லிகொட, வாதுவ என்ற முகவரியில் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

பிரணவன் நீலகண்டன்,
பணிப்பாளர்,
என் அன்ட் என் கோர்பரேட் சேர்விசஸ் (பிறைவட்) லிமிடெட்,
(கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்).

கந்தையா நீலகண்டன் கட்டிடம், (4 ஆம் மாடி),
இல.2, டீல் பிளேஸ், கொழும்பு 00300.

10-09

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## கொழும்பு பிரதேச செயலகப் பிரிவு

### 2025 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு மதுபானத் தவறணைகளைக் குத்தகைக்கு மீள் விற்றல்

*2024.08.09 ஆந் திகதி இது தொடர்பாக 2397 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக,*

*02. 2025 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு மதுபானத் தவறணைகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கு 2024.09.13 ஆந் திகதி அன்று ஏலவிற்பனை இடம்பெற்றது. இதில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தவறணைகள் விற்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இலக்கம் 01 பிரிவு கோட்டை வெளிநாட்டு மதுபானத் தவறணை*
*இலக்கம் 02 பிரிவு மோதரை வெளிநாட்டு மதுபானத் தவறணை*

*03. இதற்கமைவாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் 2024.10.11 ஆந் திகதி மீண்டும் ஏலவிற்பனைக்கு விடுக்கப்பட்டுள்ளதோடு, அதற்கான கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024.10.11 ஆந் திகதி மு.ப. 10.30 மணி ஆகும். அதே திகதியில் மு.ப.10.45 மணிக்கு வெளிநாட்டு மதுபானத் தவறணைகளின் ஏல விற்பனை இடம்பெறும் என்பதையும், 2024. 08.09ஆந் திகதி 2397 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கமைய அனைத்து நிபந்தனைகளும் நடைமுறையில் உள்ளன என்பதை அறியத்தருகிறோம்.*

*இந்த அறிவித்தலுக்கமைய சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படுமாயின் சிங்கள மொழி உள்ள உரையே வலுப்பெறவேண்டும்.*

*பியநாத் பெரேரா,*
*கொழும்பு பிரதேச செயலகம்,*
*( பதிற்கடமை).*

*கொழும்பு பிரதேச செயலகம்,*
*2024, செத்தெம்பர் 24.*

*10- 21/2*

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2024***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 04.10.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.09.2024 |
| | | வெள்ளி | 11.10.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.09.2024 |
| | | வெள்ளி | 18.10.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.10.2024 |
| | | வெள்ளி | 25.10.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.10.2024 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 01.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.10.2024 |
| | | வெள்ளி | 08.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.10.2024 |
| | | வியாழன் | 14.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.11.2024 |
| | | வெள்ளி | 22.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.11.2024 |
| | | வெள்ளி | 29.11.2024 | .. | நண்பகல் 12 | வியாழன் | 14.11.2024 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 06.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.11.2024 |
| | | வெள்ளி | 13.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.11.2024 |
| | | வெள்ளி | 20.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.12.2024 |
| | | வெள்ளி | 27.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.12.2024 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.